**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**மேட்டூர்.**
**OS.No.** 268/2013
**வழக்கு சாட்சி DW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிர்மலா | கணவர் பெயர் | : பிரேமானந் |
| தகப்பனார் பெயர் | ---- | வயது | : 40 |
| கிராமம் | கொளத்தூர் | நாள் | : 13.10.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வழங்கப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையில் துரைசாமி (எ) முத்துகவுண்டர் மகன் பச்சமுத்து என்பவர் அர்த்தனாரீஸ்வரன் மக்கள் சுபாஷ்ராஜா, தீனதயாளன் இருவருக்கும் கடந்த 30.05.2011 ம் தேதியில் மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.29/2011 ஆக பதிவு செய்யப்பட்ட ஒரு உயில் ஆவணத்தை குறித்து சாட்சியம் அளிக்க குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 30.05.2011 ம் தேதிய மேற்கண்ட உயிலை நான் தான் தட்டச்சு செய்துள்ளேன். அதிலுள்ள வாசகங்கள் அனைத்தும் பத்திர எழுத்தர் சிவராஜ் அவர்களிடம் அந்த ஆவணத்தை எழுதி கொடுத்த பச்சமுத்து தெரிவித்தார். மேற்கண்ட பத்திர எழுத்தர் சிவராஜ் அவர்கள் சொல்ல சொல்ல நான் கணினியில் தட்டச்சு செய்தேன். அந்த உயிலில் கண்ட சொத்தை பச்சமுத்து என்பவர் அவர்களது பேரன்களான மைனர் சுவாஷ்ராஜா மற்றும் தீனதயாளன் ஆகியோர்களுக்கு உயில் எழுதி கொடுத்துள்ளார். அந்த உயில் ஆவணத்தில் கணினியில் தட்டச்சு செய்தவர் என்ற இடத்தில் நான் தான் கையொப்பம் செய்துள்ளேன். பச்சமுத்து விவரங்கள் தெரிவித்த சமயத்தில் நல்ல மனநிலையிலும், உடல்நிலையிலும் தான் இருந்தார். அவர் யாருடைய தூண்டுதலுமின்றி விவரங்களை தெரிவித்தார். உயில் ஆவணம் தயார் செய்த பிறகு சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பச்சமுத்து என்பவர் அதில் கையொப்பம் செய்தார். ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள லோகநாதன் மற்றும் மற்றொருவர் சாட்சி கையொப்பம் செய்தனர். அந்த சமயத்திலும் நான்

அவர்களுடன் தான் இருந்தேன். நான் தட்டச்சு செய்த பிறகு பச்சமுத்துவிற்கு அதிலுள்ள விவரங்களை படித்து காண்பித்தோம், அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பிறகு தான் உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டது. ஆவண எழுத்தர் சிவராஜ் என்பவரும் அந்த உயில் ஆவணத்தில் ஆவணம் தயார் செய்தவர் என்ற இடத்தில் கையொப்பம் செய்துள்ளார்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 27.10.2025 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.